


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், விளவங்கோடு வட்டம், பாகோடு-பி வருவாய் கிராம், திக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (08.06.2016) இரண்டாம் கட்ட சிறப்பு மனுநீதி திட்ட முகாமில் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை பார்வையிட்டார்.

செ.வெ.எண்: 337/2016 நாள்: 08.06.2016

**இயற்கை இடர்பாடுகள் ஏதேனும் ஏற்பட்டால் அதனை உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.**

**இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாமில்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்**
**பொதுமக்களிடம் வேண்டுகோள்.**

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பாகோடு-பி வருவாய் கிராமம், திக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (08.06.2016) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் இரண்டாம் கட்ட சிறப்பு மனுநீதி திட்ட முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

26.05.2016 அன்று நடைபெற்ற முதற்கட்ட முகாமில் 263 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. இதில் 45 தகுதியான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.06.2016) நடைபெற்ற இரண்டாம்கட்ட முகாமில், ஏற்கெனவே பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பதில்களை தெரிவித்தார்கள்.

இம்முகாமில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக 2 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்களும், வேளாண்மைத்துறை சார்பாக 3 பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் தலா இரண்டும், (ஒரு தென்னங்கன்று முழு விலை ரூ.40/- இதற்கு 50 சதவீத மானியமாக ஒரு தென்னங்கன்று ரூ.20/-க்கும்), 5 பயனாளிகளுக்கு இந்திராகாந்தி விதவை உதவித்தொகை, 2 பயனாளிகளுக்கு கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, 22 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை, 3 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி உதவித்தொகை என 32 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ. 1000/- பெறுவதற்கான ஆணைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடைகோடியில் உள்ள மக்களுக்கும், அரசின் நலத்திட்ட உதவிகள் சென்றடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, ஒவ்வொரு துறைகளின் வாயிலாக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். மேலும் பொதுமக்கள் இருப்பிடத்திற்கே நேரடியாக சென்று துறை அலுவலர்கள் சிறப்பு மனுநீதி திட்ட முகாம், அம்மா திட்ட முகாம் போன்றவற்றை நடத்தி, கோரிக்கை மனுக்கள் பெறுவதுடன், மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், நமது மாவட்டத்தில் உள்ள வருவாய்த்துறை அலுவலர்கள், தமிழ்நாடு அரசின் திட்டங்களை அனைத்து பகுதியில் உள்ள மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். மேலும் பொது மக்களின் பயண சிரமத்தை போக்கிடும்வகையிலும், ஜாதி, வருமான, இருப்பிட சான்றிதழ்களை எளியமுறையில் கிடைத்திட தமிழ்நாடு அரசு பொது இ-சேவை மையம் தொடங்கியுள்ளார்கள். இதன்

மூலம் தாங்கள் அருகில் உள்ள பொது இ-சேவை மையத்தினை அணுகி, சான்றிதழ்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்தார். மேலும் பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்கள் மீது எடுத்த நடவடிக்கைகளில் ஏதேனும் சந்தேகம் அல்லது மாற்றம் இருந்தால் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள் அல்லது கோட்டாட்சியர்கள் அல்லது மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக புகார் தெரிவிக்கலாம். மேலும் இயற்கை இடர்பாடுகள் ஏதேனும் ஏற்பட்டால் அதனை உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு 1077 என்ற இலவச தொலைபேசி எண்ணில் புகார் தெரிவிக்க வேண்டும் எனவும், தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதால், பொதுமக்கள் தங்களது வீடுகள், சுற்றுபுறத்தினை சுத்தமாக வைத்துக்கொள்வதோடு, சுகாதாரத்துறை அலுவலர்கள் வழங்கும் அறிவுரைகளை பின்பற்றி, நமது மாவட்டத்தில் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் மூலம் பாதிப்பு ஏதும் இெல்லை என்ற நிலையை உருவாக்கிட முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

முன்னதாக வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத்துறை, சுகாதாரத்துறை ஆகிய துறைகளின் மூலம் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நிகழ்ச்சியில் சார் ஆட்சியர் திருமதி. ஸ்ரேயா பி.சிங் இ.ஆ.ப., சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு. தி. சுப்பையா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை துணை ஆட்சியரி திரு. ரவி, விளவங்கோடு வட்டாட்சியர் திருமதி. ஷீலா, பாகோடு பேரூராட்சி துணைத்தலைவர் திரு. தெய்வபிள்ளை, திக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு. இராஜகோபால் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.